JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **8/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | **Arumugam** | Caste | |
| Father’s Name | **Perumal** | Calling | |
| Village | **chenni valasu** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**A**1 **And A**2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். 25.10.2015 ம் தேதி மாலை 5 மணியிலிருந்து 5.30 மணி இருக்கும். பீரங்கி மேடு வீதியில் என்னுடைய உறவினர் வீட்டின் அருகில் நானும் என் உறவினரும் நின்று பேசிக்கொண்டிருந்த போது சத்தம் கேட்டது என்ன சத்தம் என்று பார்க்கச் சென்றோம். அ.சா.1 சக்திக்கு தலையில் இருந்து இரத்தம் வழிய ஆஜர் எதிரி இருவர்களுடனும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். ஆஜர் எதிரி இருவரும் அ.சா.1 சக்தியை கல்லால் அடித்ததில் இரத்தகாயம் ஏற்பட்டதை நான் பார்த்தேன். எந்த கல்லால் அ.சா. 1 யை ஆஜர் எதிரிகள் இருவரும் தாக்கினார்கள் என்று தெரியாது.

2. அ.சா.1 எந்த வித சட்டை அணிந்திருந்தார் என்றால் வெள்ளை கலர் சட்டையில் பச்சை கலர் கோடு போட்டிருந்த சட்டையை அணிந்திருந்தார். நான் போகும் போது ஆஜர் எதிரிகள் என்ன கூறி சென்றார்கள் என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை. அ.சா.1 சக்தியை பக்கத்தில் இருந்த ஒருவர் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவத்தன்று நான் அ.சா.2 விஜயா என்பவர் வீட்டில் இருந்தேன். நானும் விஜயாவும் நின்று பேசிக் கொண்டிருந்தோம். போலீசார் விசாரணையில் நான் விஜயா உடன் பேசிக் கொண்டிருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர் என்றால் சரிதான். அ.சா.1 உறவினர் என்பதால் அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது வார்டு கவுன்சிலர் ஐயப்பன் அங்கிருந்தார் என்றால் சரிதான். எங்களுக்கு எதாவது தேவை என்றால் நாங்கள் ஐயுப்பனை பார்ப்போம் என்றால் சரிதான்.

2. எதிரிகளுக்கும் ஐயப்பனுக்கும் முன் விரோதம் இருப்பது பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்குள் உள்ள பிரச்சனையை தெரிந்து கொண்டுவழக்கிற்காக தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை மறுநாள் காலை விசாரித்தார்கள். போலீசார் என்னை ஒரு முறை விசாரித்தார்கள். எப்படி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று போலீசார் சொன்னார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை